| Roll No. | | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 63 ]

Total No. of Questions : 63 ]

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 24

[ Total No. of Printed Pages : 24

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

**Code No. : 10-T**

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

## Subject : First Language — TAMIL

ದಿನಾಂಕ : 01. 04. 2011 ]

[ Date : 01. 04. 2011

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-45 ರವರೆಗೆ ]

[ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125 ]

[ Max. Marks : 125

**FOR OFFICE USE ONLY**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 14. | | 27. | | 40. | | 53. | |
| 2. | | 15. | | 28. | | 41. | | 54. | |
| 3. | | 16. | | 29. | | 42. | | 55. | |
| 4. | | 17. | | 30. | | 43. | | 56. | |
| 5. | | 18. | | 31. | | 44. | | 57. | |
| 6. | | 19. | | 32. | | 45. | | 58. | |
| 7. | | 20. | | 33. | | 46. | | 59. | |
| 8. | | 21. | | 34. | | 47. | | 60. | |
| 9. | | 22. | | 35. | | 48. | | 61. | |
| 10. | | 23. | | 36. | | 49. | | 62. | |
| 11. | | 24. | | 37. | | 50. | | 63. | |
| 12. | | 25. | | 38. | | 51. | | × | |
| 13. | | 26. | | 39. | | 52. | | × | |

| | | | |
|---|---|---|---|
| | | ***Total Marks*** | |
| **Total Marks in words** | | **Grand Total** | |
| 1. ✓ | | ✓ | ✓ |
| 2. ✓ | | | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* |

[ Turn over

*மாணவர் கவனத்திற்கு :*

i) இது வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள்.

ii) ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கத் தேவையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள அளவின்படியே விடைகளை எழுதவும்.

iii) இந்த வினாத்தாள் 'பொருத்துக' பிரிவையும் சேர்த்து மொத்தம் 63 வினாக்களைக் கொண்டுள்ளது.

iv) மாணக்கர்கள் விடைகளை பென்சிலால் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதிய விடைகள் மதிப்பிடப்படமாட்டாது.

v) மாணாக்கர்களுக்கு வினாத்தாளைப் படிப்பதற்கென 15 நிமிடங்கள் கூடுதலாக தரப்பட்டுள்ளது.

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றை தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடை பகுதியில் விடையை குறியீட்டுடன் முழுவதுமாக எழுதவும் : $15 \times 1 = 15$

1. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்

(A) ஆல்பர்ட் ஸ்வைடர்

(B) எம். அரியல்

(C) செர்டகாப்

(D) ஜி. யு. போப்.

*விடை :* ______________________

2. முடுக்காய் நின்றவள்

(A) மணிமேகலை

(B) சிந்தா விளக்கு

(C) முத்தாள்

(D) தீவதிலகை.

*விடை :* ______________________

3. யானையை அடக்கும் கருவி

(A) கோல்

(B) அங்குசம்

(C) குனி

(D) மருந்து.

*விடை :* ______________________

4. வங்கம் இதன் பொருள்

(A) புரவி

(B) களிறு

(C) கரும்பு

(D) கப்பல்.

*விடை :* ______________________

5. 'கவிமணி' என்று அழைக்கப்பெற்றவர்

(A) தேசிக விநாயகம்பிள்ளை

(B) மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

(C) உ. வே. சாமிநாத ஐயர்

(D) வேதநாயகம் பிள்ளை.

*விடை :* ______________________

6. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று

(A) சூளாமணி

(B) மருமக்கள் வழி மான்மியம்

(C) புறநானூறு

(D) ஏர் எழுபது.

*விடை :* ______________________

7. வாழும் மக்களுக்குப் பொதுவானவை

(A) பாலும் பழமும்

(B) தேனும் மீனும்

(C) மழையும் பயிரும்

(D) பாகும் பருப்பும்.

*விடை :* ______________________

8. ‘எங்கள் குடும்ப விவகாரத்தில் தலையிட வேண்டாம்’ என்றவர்

(A) அந்தணரின் மனைவி

(B) லியோவின் மனைவி

(C) சின்னப்பிள்ளை

(D) திம்மக்கா.

*விடை :* ____________________

9. சினையாகு பெயர்

(A) சோளம் விதைத்தான்

(B) நெல் அறுத்தான்

(C) கடலை உண்டான்

(D) வெற்றிலை நட்டான்.

*விடை :* ____________________

10. வினையாலணையும் பெயர்

(A) வா

(B) வருக

(C) வருபவர்

(D) திரு.

*விடை :* ____________________

11. ஒற்றளபெடை

(A) துப்பாயதூஉம்

(B) தீதொரீஇ

(C) கலங்ங்கு

(D) இலமென் றசைஇ.

*விடை :* ____________________

12. இரண்டு சீர்களை உடையது

(A) குறளடி

(B) சிந்தடி

(C) அளவடி

(D) நெடிலடி.

*விடை :* __________

13. காஞ்சிபுரம் வாங்கினான்

(A) தொழிலாகு பெயர்

(B) பண்பாகு பெயர்

(C) இடவாகு பெயர்

(D) காலவாகு பெயர்.

*விடை :* __________

14. 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்றவர்

(A) ஆபுத்திரன்

(B) சுந்தர முனிவர்

(C) தத்தன்

(D) சேதி மன்னன்.

*விடை :* __________

15. 'அனும நாயகன்' எனப்படுபவன்

(A) பாகவதன்

(B) கோடங்கி

(C) மேளக்காரன்

(D) துடியன்.

*விடை :* __________

கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : $5 \times 1 = 5$

16. இந்திரப் பிரியதர்ஷிணி பிரசஸ்தி பெற்ற பெண்மணி .................... .

17. தேயக் கண்டது .................... .

18. மண்ணுக்குக் கீழாய் மதித்தீரோ .................... .

19. உலகியல் வாழ்விற்கு .................... வேண்டும்.

20. அனுபவம் நிறைந்தவர் .................... நூறு நிரம்பியவர் அறிவுடை நம்பி.

21. பொருத்துக : 5 × 1 = 5

| | | | |
|---|---|---|---|
| (a) | குடிலன் | i) | நல்லாதனார் |
| (b) | ஐம்பெருங்காப்பியம் | ii) | இயேசு காவியம் |
| (c) | சதாசிவ தேசிகர் | iii) | ஏவுகணை |
| (d) | நைட்ரஜன் | iv) | அரசன் |
| (e) | கண்ணதாசன் | v) | மணிமேகலை |
| | | vi) | அமைச்சன் |
| | | vii) | ஆனந்தரங்கக் கோவை |

*விடைகள் :*

a) ______________________

b) ______________________

c) ______________________

d) ______________________

e) ______________________

பின்வரும் வினாக்களுக்கு ***ஒரு*** வாக்கியத்தில் விடை தருக : 10 × 1 = 10

22. கடவுளின் செயல்கள் யாவை ?

______________________

______________________

23. பூதஞ்சேந்தனார் யாரிடம் சேரும் செல்வம் இனியது என்றார் ?

24. ஐம்பூதங்கள் யாவை ?

25. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?

26. முசே லெனுவார் பஞ்சம் வந்த போது என்ன உத்தரவிட்டார் ?

27. வரமறுத்த அந்தணரிடம் பிள்ளையவர்களுடன் வந்தவர்கள் கூறியது யாது ?

28. டொல்லு குனித எந்த அளவிற்கு மக்களைக் கவர்ந்துள்ளது ?

29. கால்நடைகள் நீரருந்த திம்மக்கா என்ன செய்தார் ?

30. உலக இன்னல்களுக்கெல்லாம் காரணம் எது ?

31. வஞ்சப்புகழ்ச்சி அணி என்றால் என்ன ?

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***மூன்று*** வாக்கியங்களில் விடை தருக : $15 \times 2 = 30$

32. குணங்குடி மஸ்தான் இறைவனை நோக்கி இயம்புவது யாது ?

33. ஒரு நாட்டின் உறுப்பாக அமைவன யாவை ?

34. எது நாய் பெற்ற தெங்கம் பழம் போன்றது ?

35. சோழனின் போர்யானை கடைவாயிலில் நாணம் கொண்டு நின்றது ஏன் ?

36. ஆனந்தரங்கப் பிள்ளை குறித்து கவர்னர் துய்ப்ளே கூறியன யாவை ?

37. 'பருவ நெருப்பில் காய்ச்சிய வாள்' என்று சிற்பி இளைஞனை நோக்கிக் கூறுவன யாவை ?

38. மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஏழை மாணவர்களுக்கு எவ்வாறு படிப்பித்து அனுப்புவார் ?

39. அஞ்சு பாபி உடல் ஆரோக்கியம் குறித்து என்ன கூறுகிறார் ?

40. மரபு என்றால் என்ன ? சான்று தருக.

41. ஆகுபெயர் என்றால் என்ன ?

42. லாவணிப் பாடகர்கள் சமூக அக்கறை உடையவர்கள் என்பதை எவ்வாறு அறியலாம் ?

43. தீயவழியில் பொருளீட்டியவர் எவ்வாறு துன்புறுவர் ?

44. சின்னப்பிள்ளை பண்ணையாளர்களின் வெறுப்பைப் பெறக் காரணம் என்ன ?

45. குடிலன் செய்த சூழ்ச்சி யாது ?

46. சாந்தா பார்பராவைத் தேர்ந்தெடுத்ததற்கு விடுதி மேலாளர் என்ன காரணங்களைக் கூறுகிறார் ?

*குறிப்பு :* பின்வரும் வினாவிற்கு இடம் சுட்டிபொருள் விளக்குக : 7 × 3 = 21

47. ''ஐயா எங்களில் ஒருவருக்குக் கூட சொந்தமாக வீடு இல்லை''

48. ''மழை பொழியும்; பயிர் விளையும்; யானைகளால் தீங்கு நேரிடாது''

49. ''சாணேற முழம் சறுக்குகிறதே ! நான் என்ன செய்வேன்'' ?

50. ‘‘பீலிபெய் சாகாடும் அச்சிறும்’’

51. ‘‘கட்டுண்டோம் பொறுத்திருப்போம்’’

52. ‘‘மகரந்தம் சிந்தட்டும் மாமிசம் சிந்த வேண்டாம்’’

53. ‘‘நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.’’

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஐந்து*** அல்லது ***ஆறு*** வாக்கியங்களில் விடை தருக : $2 \times 3 = 6$

54. அடுக்குத் தொடருக்கும் இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடு யாது ?

*அல்லது*

வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.

55. உயிரளபெடையை விளக்கிச் சான்று தருக.

*அல்லது*

பிறிது மொழிதல் அணியை விளக்குக.

56. பின்வரும் பழமொழிகளுள் ஏதேனும் ஒன்றை விளக்கி எழுது : $1 \times 3 = 3$

i) யானைக்கும் அடி சறுக்கும்

ii) அடிப்பார் அடித்தால் அம்மியும் நகரும்

iii) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?

அடிபிறழாமல் எழுதுக : $1 \times 4 = 4$

57. ''காதொளிரும்'' எனவரும் பாடல்.

*அல்லது*

''நாடா கொன்றோ'' எனவரும் பாடல்.

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் எட்டு வாக்கியங்களில் விடை தருக : 3 × 4 = 12

58. பாகவத மேள - ஆட்டத்தை விளக்கி வரைக.

*அல்லது*

மனோன்மணீயம் கதைச் சுருக்கத்தை வரைக.

59. சின்னப்பிள்ளையின் தன்னலம் கருதாத தொண்டினை விளக்கி வரைக.

*அல்லது*

முதியவராக வந்தவர் வழங்கிய தீர்ப்பினை வரைக.

60. பாரத நாட்டின் சிறப்புகளாக திரு. வி. க. கூறுவன யாவை ?

*அல்லது*

அமைதிப் புறாவின் ஆசைகளை எழுதுக.

61. பின்வரும் செய்யுளைப் படித்து அதன் திரண்ட கருத்தை எழுதுக : $1 \times 4 = 4$

மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன். குளிர்ந்த தென்றல் வந்தது
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்
சோலை நடுவே சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சிகொண் டேனே !

- பாவேந்தர்.

62. நீ வாழும் பகுதியில் உள்ள தெருக்களில் மரங்கள் நட்டுத் தருமாறு நகராண்மைக் கழக ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக. 5

*அல்லது*

உன் பள்ளியில் நடந்த ‘பெற்றோர் நாள் விழா’ நிகழ்ச்சிகளை விளக்கி உன் நண்பனுக்கு/தோழிக்கு மடல் ஒன்று வரைக.

63. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்துக் கட்டுரை வரைக : $1 \times 5 = 5$

i) கணினியின் பயன்கள்

ii) போக்குவரத்துப் பெருக்கமும் சுற்றுச்சூழல் கேடும்

iii) விளையாட்டு விழா.